Dr. H. V. HANDE : Are the Government aware of the fact that construction has already started? The survey has been done for the whole area and plans have already been drawn ? I think beginning work of construction is going on. May I know what is the stage at which the matter stands and what steps have been taken by this Government?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசின் கவனத்திற்கு வந்துதான் அதுபற்றி அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எந்தவிதமான பதிலும் வரவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தீவுத் திடலில் கட்டடங்கள் கட்டுவது சம்பந்தமாக கடிதம் எழுதியது மாத்திரமல்லாமல் நேரிலும் சந்தித்து மத்திய அரசில் பொறுப்புள்ளவர்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை நிச்சயமாக நிறுத்திவிடுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஹண்டே அவர்கள் சொல்கிற தகவல் புதிதாக இருக்கிறது. மறுபடியும் அதை வைத்துக் கொண்டு அது சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொன்ன பிறகு வேறு கேள்விகளுக்குத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

Mineral Deposits

* 202 *Q.*—Thiru N. DENNIS :
Thiru P. MALAICHAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Molybdenite has been founded near Palani in large quantities;

(*b*) if so, the details thereof; and

(*c*) the steps taken to market the product?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம். பழனிக்கு அருகில் காடிக்குட்டம் என்னுமிடத்தில் மாலிப்டினைட் என்னும் கனிப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாலிப்டினைட் படிவம் உள்ள இப் பகுதியை இந்திய புவியியல் ஆய்வு நிறுவனத்தார் துளைக் கருவியின் மூலம் துளை போட்டு தீவிர ஆய்வு செய்து வருகின்றனர். இவ்விடத்தில் ஏறத்தாழ 36,000 டன், 0.1442% வீதம் மாலிப்டைனைட் தாது 60 மீட்டர் ஆழத்தில் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விரிவான ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து வருகிறது.

(உ) இக் கனிப் பொருள் எப்படி பயன்படுத்தப்படும் என்பது பற்றிய முடிவு தற்போது கூற இயலாது.

1971 டிசம்பர் 9]

திரு. என். டென்னிஸ்: இப்படிப்பட்ட திட்டம் ஏதேனும் தமிழ்நாட்டில் வேறு இடத்தில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது பற்றிய தகவல் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: பழனிக்கு அருகே கிடைக்கக் கூடிய இந்த மாலிப்டினைட் இருக்கிறதே இது இந்த யுத்தத்திற்கு தேவையான டாங்க்ஸ் போன்றவை வலிவாக இருப்பதற்காக உபயோகப்படுத்தப்படக்கூடிய ஒரு முக்கியமான மூலப்பொருளாக இருப்பதால்—இப்போது மத்திய சர்க்கார் இரண்டு மூன்று இடங்களில்தான் இதைச்செய்து கொண்டிருக்கிறார்கள். அதில் 36,000 டன்னுக்கு அதிகமாகக் கிடைக்கும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இதைச் சுற்றியிருக்கக்கூடிய வேறு பகுதிகளையும் சேர்த்து அவர்கள் ஆராய்ச்சி நடத்துவதற்கும் அதற்கான உதவியை தமிழக அரசாங்கம் செய்வதோடு மாத்திரமல்லாமல் மத்திய அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தப் புவியியல் ஆராய்ச்சியை நாமே செய்யலாம். இன்றும் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

THIRU M. A. LATHEEF: Two years back the Geological Survey of Central Government conducted a survey in and around Javvadu hills. The report of the Geological Survey would have been sent to Central Government? Has that report been forwarded to this Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது மதுரை மாவட்டம் பழனியைப் பற்றிய கேள்வி.

*203 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏராளமான இரும்பு கிடைக்கிறது என்று ஐ.நா. சபைக்குழு மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) ஐக்கியநாடு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு கனிப்பொருள் வளர்ச்சித்திட்டம் வட ஆற்காடு மாவட்டத்தில் நடத்திய ஆய்வின் பயனாக, திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள கவுதி மலையிலும், மற்றும் அதன் அருகிலுள்ள மலைகளிலும் சுமார் 14 கோடி டன் இரும்புத்தாது இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த இரும்புத்தாது சுமார் 40 சதவிகிதம் இரும்புச் சத்து கொண்டதாக உள்ளது. இவ்விரும்புத்தாதின் உபயோகத்தன்மையையும் அதை வெட்டியெடுக்கும் சாத்தியக்கூறுகளையும் ஆராயும்படி ஐக்கியநாட்டு வளர்ச்சித் திட்டத்தை மத்திய அரசு வாயிலாக கேட்கப்பட்டிருக்கிறது.